1993 ஏப்ரல் 16]

369—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் தொலைக்காட்சிப் பெட்டிகளை வைத்தல்.

*10960—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தொலை தூரத்திலிருந்து வருகின்ற எல்லாத் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைதூரத்திலிருந்து—கன்னியாகுமரியிலிருந்து சென்னை வருவது திருநெல்வேலி, மதுரையிலிருந்து இங்கே வருகிற பயணிகளுக்கு கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் ஒருசில பஸ்களில் இதுபோன்ற அமைப்பை வைத்திருப்பதால் அந்தப் பயணிகளுக்கு அது பொழுது போக்காக இருப்பதுடன், அது ஒரு டிமாண்டை பயணிகள் மத்தியில் ஏற்படுத்துகிறது. இந்தப் பஸ்ஸில் சென்றால் ஏதாவது ஒரு சினிமா படத்தை பார்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் இருப்பதால், இதில் அதிகமான பேர் பயணம் செய்வதற்கு வசதியாக இருப்பதால், இதுபோன்ற கருத்தை மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பேருந்துகளுக்கும் நம்முடைய பேருந்துகளுக்கும் இருக்கிற வித்தியாசம் பல இருக்கிறது. ஆம்னி பஸ் உரிமையாளர்கள் எங்களிடத்தில் தங்கள் மனுக்களை கொடுக்கிறார்கள். 15 நாட்களில் அந்த மனுக்களை பரிசீலிக்கவில்லை என்று சொன்னால் உச்சநீதி மன்றத்தில் சென்று அங்கேயிருந்து அனுமதி பெற்று அந்தப் பேருந்துகளை இயக்குகிறார்கள். சில பேருந்துகளைப் பொறுத்தவரையில் ‘ நேஷனல் பெர்மிட் ’ வாங்கிக் கொண்டு இங்கே பேருந்துகளை இயக்குகிறார்கள். அதைப்போல சௌத் ஜோன் பெர்மிட் என்று சொல்லப்படுகிற பெர்மிட்டை வாங்கிக் கொண்டு இங்கே பேருந்துகளை இயக்குகிறார்கள். ஆகவே, இதனை கருத்திற்கொண்டு பார்க்கிறபோது தனியார்

எப்படி வேண்டுமானாலும் மக்களை, பயணம் செய்ய வருகிற வர்களை அணுகி 60 ரூபாய் என்கிறார்கள், 70 ரூபாய் என்கிறார்கள். இப்படி நாள்தோறும் ஒரு ரேட்டை மாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அரசுத் துறையைப் பொறுத்தவரையில், நிர்ணயிக்கப்பட்ட விலையைத் தவிர, குறிப்பிட்ட கட்டணத்தைத் தவிர, நாம் வசூலிக்க முடியாது. ஆகவேதான், அரசுத் துறையைப் பொறுத்தவரையில், இது போன்ற பராமரிப்புச் செய்வது சுலபமான காரியம் அல்ல. கூடுதலாக செலவாகின்ற காரணத்தாலே, இது தவிர்க்கப்பட்டு இருக்கிறது. அரசு மேலும் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. 1989-லே மோட்டார் வாகனங்கள் சட்ட விதிகளின்படி—377 விதிகளின்படி வீடியோக்களோ, ரேடியோக் களோ, டேப் ரெக்கார்டர்களோ வைக்கக்கூடாது என்று விதிமுறைகள் வகுக்கப்பட்டு இருக்கின்றன.

முற்பகல் 10-35

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற தொலைக்காட்சிப் பெட்டி களை வைத்தோம் என்றால், நம்முடைய அரசினுடைய பல்வேறு திட்டங்களைக்கூட, உதாரணமாக மதுவிலக்கு பற்றிய படங்கள் இன்னும் பல்வேறு எஜுகேஷனல் ஃபிலிம்ஸ் போன்றவைகளை நாம் அதில் போட்டோம் என்றால், அது பொதுமக்களுக்கும் சமுதாயத்திற்கும் மிக நல்ல பயனை அளிப்பதாக இருக்கும். எனவே, இதை மீண்டும் பரிசீலனை செய்து, இதுபோன்ற அமைப்பை ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இருக்கிற அரசியல் கட்சி கள், கன்ஸ்யூமர்கள், கூடுதலாக ஆகின்ற செலவிற்கு, அரசுப் பேருந்துகளில் கட்டணங்களை உயர்த்துவதற்கு அனுமதியைத் தந்தால், இதுபோன்ற நிலையைப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு.வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா நெடுந்தூரப் பஸ்களிலும் இல்லா விட்டாலும், சுற்றுலாத் தலங்களுக்குச் செல்கின்ற பஸ்களி லாவது இப்படிப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டிகள், அதனுடன் இணைக்கின்ற வீடியோ இயந்திரங்களைப் பொருத்தி அங்கே செல்லுகின்ற மக்களுக்கு நேரத்தைப் போக்குதவற் காகவும், நமது இதய தெய்வம், புரட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு திரைப்படங்களின் மூலமாக நல்ல பல கருத்துக்களை நாட்டு மக்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள்—அப்படிப்பட்ட

1993 ஏப்ரல் 16]

கருத்துக்களை எல்லாம் இன்றைக்கும் மக்கள் அறிந்து கொள்வதற்கு ஏற்ப நெடுந்தூர பஸ்களிலே வீடியோ இயந்திரங்களைப் பொருத்தி, அப்படிப்பட்ட திரைப்படங்கள் திரையிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற அளவிற்கு அந்தப் பேருந்துகள் நம்முடைய போக்குவரத்துக் கழகத்திலே இயக்கப்படுவதில்லை. இருக்கின்ற பேருந்துகள், ஸ்பேர் பஸ்கள் என்று சொல்லப்படுகின்ற அந்தப் பேருந்துகளை வைத்துக் கொண்டு, தற்காலிகமாக ஓரிரு நாட்களுக்கு நாங்கள் இயக்கிக் கொண்டு இருக்கிறோம். ஆகவே, இதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பெயரில் வைக்கவுள்ள போக்குவரத்துக் கழகத்தின் பஸ்கள் வெளி மாநிலத்திற்கு செல்ல இருப்பதால், வெளி மாநிலத்திலிருந்து வருகின்ற பயணிகளைக் கவருகின்ற விதத்தில், அந்த பஸ்களிலாவது தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம், டாக்டர், புரட்சித் தலைவியினுடைய பெயரைச் சூட்டியிருக்கிற காரணத்தாலே, எதிர்காலத்தில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 370 டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

370—

அணைப்புதூரிலுள்ள தமிழ்நாடு நூற்பாலை.

*9139—டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவிநாசித் தொகுதியில் அணைப்புதூரிலுள்ள தமிழ்நாடு நூற்பாலை மூடிக்கிடப்பதை அரசு அறியுமா ?